**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP.No.90/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் நாள் செவ்வாய் கிழமை
ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்துலெட்சுமி | க/பெ.: | லேட். ஆறுமுகம் |
| கிராமம்: | மணலி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 76 | முகவரி: | மணலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 17.06.2025.

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.05.2018 | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 10.05.2018 | விபத்துப்பதிவேடு | உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | 10.05.2018 | திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த மெடிக்கோ லீகல் ஒப்பினீயன் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 10.05.2018 | திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| ம.சா.ஆ.5 | 25.05.2018 | 1–ம் எதிர்மனுதாரர் வாகன MV Report | உண்மை நகல் |
| ம.சா.ஆ.6 | -- | 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் RC Book | நகல் |
| ம.சா.ஆ.7 | -- | 1–ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டு பாலிசி | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.8 | -- | மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ குறிப்புகள் | அசல் |
| ம.சா.ஆ.9 | -- | மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் (எண்ணிக்கை-11), ரூ.4,168/- | அசல் |
| ம.சா.ஆ.10 | -- | மனுதாரருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் குறுந்தகடு-1 | அசல் |
| ம.சா.ஆ.11 | -- | மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

<u>3-ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

போலீஸ் புகார் வாக்குமூலம் வாங்கினார்களா, அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் மகள்கள் மற்றும் பிள்ளைகளை என் கணவர் இறப்பதற்கு முன்பே திருமணம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். பால் வியாபாரம், விவசாய வேலை சம்பந்தமாக மாதம் ரூ.12,000/- வருமானம் வருவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான உண்மையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து எப்படி நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ஏற்பட்டகாயம் சொற்பகாயம் என்றும், தற்போது அன்றாட வேலைகளை செய்து வருவதாகவும், என்னை நம்பி யாரும் இல்லாததாலும் கேட்டுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகமாக உள்ளதென்றும், சாலை விதிகளை அனுசரிக்காமல் வயது முதிர்வின் காரணமாக என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்திற்கு 3-ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்திற்குள்ளான வாகனம் உரிய முறையில் காப்பீடு செய்யாததால் காப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. விபத்து ஏற்படுத்திய வாகன ஓட்டுநருக்கு வாகன உரிமம் இல்லாமலும், வாகனம் ஓட்ட தகுதியில்லதவர் என்பதாலும், 3-ம் எதிர்மனுதாரரால் காப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாததால் வாகன ஓட்டுநரிடம் இழப்பீடு பெற கடமைப்பட்டவர் அல்ல. 3-ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து

மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.